**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 33** **நாள்: 08.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியால் 18.01.2018 அன்று வெளியிடப்பட்ட வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து 29.01.2018 வரை பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணை தொடர்பாக நேரடியாக கருத்துகளை கேட்பதற்கான கலந்தாய்வுக் கூட்டம் மறுவரையறை ஆணைய தலைவரும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையருமான திரு. எம். மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்கள் தலைமையில், மாவட்ட மறுவரையறை அதிகாரி/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் திரு. தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், முன்னிலையில் இன்று 08.03.2018 ரிப்பன் மாளிகை வளாகத்திலுள்ள ''அம்மா மாளிகை'' கூட்டரங்கில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் அந்தந்த மண்டல அலுவலகங்களிலும், வட்டார அலுவலகங்களிலும் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டு அக்கருத்துருக்களின் மீது அரசியல் கட்சிகள்/ பொது மக்களின் ஆட்சேபணை/கருத்துகள் தொடர்பான மனுக்கள் 18.01.2018 முதல் 29.01.2018 வரை பெறப்பட்டன. வடக்கு வட்டாரத்தில் –102 மனுக்களும், மத்திய வட்டாரத்தில் –104 மனுக்களும், தெற்கு வட்டாரத்தில் – 293 மனுக்களும் மொத்தம் 499 மனுக்கள் பெறப்பட்டு அனைத்து மனுக்களும் வட்டார அலுவலர்களால் பரிசீலினை செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகர ாட்சி ஆணையர் மற்றும் மாவட்ட மறுவரையறை அதிகாரி அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டன.

இதன் மீது 09.02.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஆலோசனைக் கூடத்தில் மாவட்ட மறுவரையறை அதிகாரி/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் மீது கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது.

தகுந்த பரிசீலினைக்கு பிறகு வரைவு வார்டு மறுவரையறை முன்மொழிவுகள் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மறுவரையறை ஆணையத் தலைவர்/ தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் இன்று 08.03.2018 வரைவு வார்டு மறுவரையறை முன்மொழிவுகள் மீது நேரடியாக கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள்/பொது மக்கள் கலந்து கொண்டு ஆட்சேபணை/கருத்துகளை நேரடியாக தெரிவித்தனர். அவர்களுடைய கருத்துகளை கேட்டறிந்து அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மறுவரையறை அதிகாரி/வட்டார துணை ஆணையர்களுக்கு மறுவரையறை ஆணையத் தலைவரான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தீர்வு செய்ய வேண்டிய சில கோரிக்கைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தி மறுவரையறை அதிகாரி/வட்டார துணை ஆணையர்கள் கள ஆய்வு செய்து அறிக்கையை ஆணையர் மூலமாக ஆணையத்திற்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மறுவரையறை ஆணையத்தின் உறுப்பினர்/செயலர் திரு. த.சு. ராஜசேகர், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திருமதி. ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர்(கல்வி) திருமதி.ஆர். மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., அவர்கள், மற்றும் வடக்கு வட்டார துணை ஆணையர்,திருமதி.எஸ். திவ்யதர்ஷிணி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமை) திருமதி.டி.ஜெயாசீலா அவர்கள் மற்றும் இத்துறையை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**